DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai.

**CC.NO.65/2024**

Deposition of LW11 Examined as PW9 Date: 07.04.2026

| | |
|---|---|
| Name | திரு. பிரேம்குமார் |
| Father's/Husband's Name | கண்ணையன் |
| Village | வேப்பத்தூர் |
| Taluk | திருவிடைமருதூர் |
| Age | 60/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 07.04.2026

(A1 Present. A2 absent. Petition U/S.355 BNSS filed and allowed)

**முதல் விசாரணை**

நான் கும்பகோணம் போக்குவரத்து புலன் விசாரணை பிரிவில் உதவி ஆய்வாளராக பணி புரிந்து 31.07.2025 பணி ஓய்பு பெற்று தற்போது திருவிடை மருதூர் தாலுக்கா வேப்பத்தூரில் வசித்து வருகிறேன். கடந்த 02.07.2021 அன்று குத்தாலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது தஞ்சாவூர் தனியார் மீனாட்சி மிசன் மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சிவக்குமார் என்பவர் மயக்க நிலையில் இருந்ததால் அவரது சித்தப்பா மகன் கார்த்திகேயன் என்பவரிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து குற்ற எண் 666/2021, ச/பி. இதச பிரிவுகள் 294(b),342,324,506(2) ஆகிய ச/பி கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் அன்றைய தினமே சம்பவ இடம் 11.00 மணிக்கு சென்று சாட்சிகள் பாலாஜி, ராமலிங்கம் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **(பார்வை மகசர் அ.சா.ஆ.4 மற்றும் வரைபடம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.)** சம்பவ சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரியை தேடிச்சென்றபோது 02.07.2023 ம் தேதி 13.00 மணிக்கு, பாண்டூர் கடைத்தெருவில் இருந்த ஞானஸ்கந்தன் என்பவரை குற்றக் காரணம் கூறி கைது செய்து 13.30 மணிக்கு நிலையம் வந்து பாராவசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். மற்றொரு எதிரியான லட்சுமணநாராயணன் என்பவர் தலைமறைவாக இருந்ததால் அவரை கைது செய்ய இயலவில்லை. அவர் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மூலம் பிணை பெற்று வந்துள்ளார். பட்டியல் சாட்சிகள் 1 முதல் 7 வரையிலானவர்களை விசாரணை செய்து வாக்குமூலத்தினை பதிவு செய்தேன். பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் தினேஷ்குமார் என்பவரை விசாரணை செய்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவர் கொடுத்த காயச்சான்றில் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்ற சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளை 294(b), 342, 324, 506(2) ல் இருந்து 294(b),342,326,506(2) இதசவாக மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாற்று

K [signature] SPRtd

அறிக்கை தாக்கல் செய்தேன். **(சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகளுக்கு எதிராக இதச ச/பி.294(b),342,326,506(2) ன் கீழ் 18.08.2021 ம் தேதி இறுதி அறிக்கையினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததும், சாட்சிப்பட்டியலில் உள்ள சாட்சிகளை விசாரித்ததும் நான் தான் என்றால் சரிதான். மீனாட்சி மிசன் மருத்துவமனையில் வழங்கப்பட்ட சான்றின் அடிப்படையில் வழக்கின் சட்டப்பிரிவுகளை மாற்றி சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மீனாட்சி மிசன் மருத்துவமனையில் உள்ள மருத்துவரை விசாரித்து சாட்சியாக இவ்வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையில் புகார் தாரரிடம் கையெழுத்து பெறவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை ஒருநாள் காலதாமதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த வித சம்பந்தம் இல்லை என்றாலும் பொய்யான புகாரை பெற்று எதிரிகளுக்கு எதிராக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. அ.சா.1 ,3,4 ஆகியோர் பிறழ் சாட்சியாக மாறி உள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கில் உள்ள சாட்சிகள் அனைவரும் உறவினர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த இடத்தில் எதிரிகள் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகளை காவல்நிலையத்தில் வைத்து விசாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள நபர்களை சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

K [signature]

[signature] 7/4/26